# அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

# ARIGNAR ANNA GOVT. ARTS & SCIENCE COLLEGE

காரைக்கால்



# COLLEGE MAGAZINE 2015 - 2016

# EDITORIAL COMMITTEE

Dr. **C. Sethupathi**

Dr. **V. Arjunan**

G. **Soudjada**

Dr. **M. Palanisamy**

Dr. **V. Selvaperumal**

Dr. **P.B. Nagabalasubramanian**



# அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
காரைக்கால்

# ARIGNAR ANNA GOVT. ARTS & SCIENCE COLLEGE

Nehru Nagar, Karaikal - 609 605.
Ph.: 04368-230431 Fax: 04368 - 231743
Website : www.aagac.puducherry.gov.in
E-mail : aagac.kkl@gmail.com




# College Magazine 2015 - 2016

# சிந்தனைத் தேன் சொரியும் நந்தவனத்தின் தலைவாசலில்...

அறிவியலாளர் பார்வையில் விலங்கினப் பிரிவில் பிறந்த நம்மை மனிதனாகச் சமுதாயத்திற்கு அடையாளப் படுத்துபவை உடற்கூறு, மொழி, பகுத்தறிவு என்னும் மூன்றாகும். இதில் மேம்பட்ட உயிரிதான் மனிதனாய், சான்றோராய் சமுகத்தில் மாண்புறுகிறது. இம்மூன்றின் ஏற்றத்தை ஒரு குழந்தைக்குள் கொண்டுவர ஒற்றை ஆளாய்ப் போராடிக் கொண்டிருக்கிற ஓர் முன்னத்தி உயிரியின் வடிவம்தான் தாய். 'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே' என வரும் பாடலடிகள் அனைவரும் அறிந்தவொன்று. எனினும் நல்ல வளர்ப்பினை நல்கியவர் மட்டுமே அன்னையாக முடியும்.

அந்த வகையில் **காரைக்காலின் அன்னைக் கல்லூரியாம் அண்ணா கல்லூரி** பத்துத் தாயின் மொத்த உருவமாய்ப் பயன்தந்து கொண்டிருக்கிறது. ஒற்றைத் தாய்மார்கள் பத்துமாதம் தன் கருவறையில் சுமந்த குழந்தைகளுக்கு மொழியறிவு புகட்ட எனச் சில துறைகள், உடற்கல்வி நல்க எனச் சில துறைகள், பகுத்தறிவு பகர எனச் சில துறைகள் ஆக பத்திற்கும் மேம்பட்ட பல்துறைகளும் கொண்டது அண்ணா கல்லூரி.

இது பல்வேறு ஆளுமைகளை கடந்த அரை நூற்றாண்டாக இச்சமுகத்திற்கு வழங்கிக்கொண்டு இருக்கிற அதே வேளையில் தன் பதியத்தில் இருக்கும் நாளைய ஆளுமைகளின் வீரியத்தை வெளிப்படுத்தக் கொடுத்த கடமைக் களமே இம்மலர்.

மனித வாழ்வின் மகத்தான பொழுதுகளைத் தன்னுள் கொண்ட பருவம் இளமைப்பருவம். உடல் வலியும் மனத்துணிவும் கொண்ட இளையபாரதம், தன்னையும் தாயகத்தையும் முன்னேற்றிக் கொள்ள, கல்வியை நல்லதோர் கருவியாக்கிக் கொள்ள எழுந்த அமைப்புகளுள் ஒன்று கல்லூரி.

அனுபவம் நிறைந்த பேராசிரியர்களும், ஆர்வம் நிறைந்த மாணவர்களும் ஒரு சேரக் களம் இறங்கிக் கற்று மேலேகும் இந்தக் கலைமாடத்தின் ஒரு வருட நினைவுகளைத் திரும்பவும் அசைபோட வைக்கும் நினைவுச் சோலையாய் இந்த மலர் வருகிறது.

கலையும் அறிவியலும் வளரும் தலைமுறையினருக்குக் கண்கள் எனக் கருதி வழங்கும் கலைக்கூடமாம் பொன்விழா ஆண்டை நோக்கி முன்னேகும் காரைக்கால் **அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு** இது சிறப்புமிகு நல்லாண்டு. (2015-2016)

ஒழுக்கமும், உயர்ந்த பண்புகளும் நிறைந்த தலைமுறையினரை உருவாக்குவதற்குக் கல்வி உறுதுணையாக இருக்கவேண்டும் என்பதில் முனைப்புடன் இயங்கும் முதல்வர் முனைவர் **ப. பூங்காவனம்** அவர்களின் கனிந்த அன்பில் நிகழ்ந்த வரலாற்றின் சுவடுகளை, இந்த மலர் எழிலுறத் தாங்கி வருகிறது.

படிப்பதோடு படைப்பாக்கத் திறன்களிலும் ஈடுபாடுகொண்ட நம் மாணவ, மாணவியரின் சிந்தனைத் தேன் சொரியும் நந்தவனப்பூக்களாய், கவிதைகள், கட்டுரைகள், செய்தித்துளிகள், பொன்மொழிகள் நிறைந்துள்ளன. கூடவே, ஓவியங்களும்.

வளரிளம் பருவத்தில் உயதமான எண்ணங்களின் பதிவுகளை இவற்றில் காணலாம். வகுப்பில் கற்றவையும் வாழ்வில் அறிந்தவையும் இணைந்து எழுப்பிய சிந்தனையின் வெளிப்பாடுகள் இவை. எண்ணையும் எழுத்தையும் துணையாகக் கொண்டு தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் உருவான ஆக்கங்கள் நிரல்பட அமைகின்றன.

தாயன்பையும், தந்தையின் மேன்மையும், நட்பின் சிறப்பையும் திறம்படச் சொல்லும் படைப்புகள் இதில் மிகுதி ; மனிதம் பேணும் புனிதம் அவற்றுள் ததும்புவது அழகு.

2015-2016 ஆம் ஆண்டுக்கான கல்லூரி முதல்வர் அவர்களின் அறிக்கையைத் தொடர்ந்து, தத்தம் துறைசார்ந்த தகவல்கள் நிரல் படத் தந்திருக்கின்றனர். இருபால் பேராசிரியப் பெருமக்கள்.

எளிமையும் உண்மையும் நிறைந்ததாய் இந்த மலரை உருவாக்க வேண்டும் என்று தூண்டித் துணைநின்று ஊக்கம் அளித்த கல்லூரி முதல்வர், இந்த மலரின் உருவாக்கத்திற்கு உதவியாய் விளம்பரங்கள் தந்த நிறுவனத்தார், பெற்றுத்தந்த குழுவினர், துறைசார் செய்திகளோடு படைப்புகளையும் அளித்த அனைத்துத் துறைப் பேராசிரியப் பெருமக்கள், திறமிகு படைப்புகள் நல்கிய மாணவ - மாணவியர், மிக்குறுகிய காலத்தில் இந்த மலரை எழிலுற அச்சிட்டு வழங்கிய புதுச்சேரி, விஜய் ஸ்கிரீன் நிறுவனத்தார் உள்ளிட்ட அனைவரும் இத்தருணத்தில் பெருமை கொள்வோம். அதேவேளையில் புதிதாயப் பிறக்கும் பொன்விழா ஆண்டில் இன்னும் பல சாதனைகள் நிகழ்த்திச் சரித்திரம் படைக்க உறுதி ஏற்போம்.

இவண்

**மலர்க்குழுவினர்**

# ஒழுக்கம் நிறைந்த கல்வியே உடனடித் தேவை !

'கல்வி கண் போன்றது', 'ஒழுக்கம் உயிர் போன்றது' இரண்டையும் ஒரு சேர இளைய தலைமுறையினர்க்கு எடுத்து உணர்த்தவல்ல ஆசான்கள் தெய்வம் ஒத்தவர்கள்.

'மாதா, பிதா, குரு, தெய்வம்' என்று உணர்ந்து அறிந்து உரைத்தது உண்மை. தன் குழந்தைகள் போல், தன்னிடம் கற்கவரும் மாணவ, மாணவியரைப் பேணிப் பயிற்றுவிக்கும் நல்லாசிரியர்களால் நாடும் நலம் பெறும்; வீடும் நலம் பெறும்; உலகும் உயர்வு பெறும்.

இதற்கு ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு உணர்வு மட்டும் போதாது. பெற்றோர்களின் அக்கறையும் மிகத் தேவை. கைபேசி, இணையம், தொலைக்காட்சி முதலான ஊடகங்களின் கவர்ச்சிக்கு ஆட்பட்டு மாணவ, மாணவியர் முறைதவறிச் செல்லாமல் ஒழுங்குடன் வளரப் பெற்றோர்கள் மிகுந்த அக்கரை காட்ட வேண்டும்.

இந்தக் கல்லூரியில் முதல்வர் பணி ஏற்றவுடன் இதற்கான முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் எடுத்தபோது உறுதுணை புரிந்த சக பேராசிரியர்களும், நமது கல்லூரியின் முன்னாள் மாணவரும், தற்போதைய உயர் கல்வித் துறை அமைச்சருமாகிய மாண்புமிகு. ஆர். கமலக் கண்ணன் அவர்களும், மாவட்ட ஆட்சியாளர்களும், அரசுத் துறையினரும், அலுவலர்களும் என் நன்றிக்கு உரியவர்கள்.

இதற்கு இன்னும் வலுவாகப் பெற்றோரின் பங்கேற்புத் தேவை.

இதன் அடிப்படையில் முன்னாள் மாணவர் சங்கமும் உருவாக்கப்பெற்றது. மிகுந்த அன்போடும் பரிவோடும் பங்கேற்ற மாணவ, மாணவியரைப் பார்த்து அகமிக மகிழ்ந்தேன். அரசியலில், தொழில் துறைகளில், அரசுப் பணிகளில், பல்கலைக்கழகம் உள்ளிட்ட கல்விக் குழுமங்களில் அவர்கள் இன்று திறம்படப் பணியாற்றிவருவது மகிழ்ச்சி தருகிறது. அந்தச் சங்கத்து நிர்வாகிகளுக்கும் என் நன்றி.

ஒத்துழைத்து வளர்ந்து வரும் என் மாணவச் செல்வங்களுக்கும் என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வதில் முனைப்புடன் செயல்படும் இந்தக் காலத்தில் ஒழுக்கத்தையும் அதற்கு ஒப்ப, பேண வேண்டியது இன்றியமையாக் கடமையல்லவா? இதற்கு அடிப்படையானது தாயன்பு; அதன்வழி பெறுவது தாய்மொழி. தாய் ஒத்த அன்போடு தந்தையும் ஆசிரியரும் இணைந்து உருவாக்கும் பிள்ளைகள் தாய்நாட்டின் தலைசிறந்த மாணவர்களாக உருவாவது உறுதி.

அண்மையில் அமெரிக்க வெள்ளை மாளிகையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் ஒரு மாணவி கவிதை பாடினாள். தேசிய மாணவர்களுக்கான கவிதைப்

போட்டியில், அமெரிக்க மாணவ, மாணவியர் பங்கேற்ற நிகழ்ச்சி அது. தமிழகத்தைப் பூர்விகமாகக் கொண்ட மாணவ, மாணவியர் உட்பட, நால்வர் வாசித்தளித்த கவிதைகளைப் பாராட்டி ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி மிஷேல் உபாமா கௌரவித்தார். அந்த நிகழ்வில் தான், இந்த மாணவி கவிதை பாடினாள்.

தாய்மொழியான தமிழை மறந்துவிட்டு
ஆங்கிலத்தை மாற்றுமொழியாக ஏற்றது
மிகுந்த மனவலியைத் தருகிறது.

தலை முடியைப் போல,
எனது பூர்விகமும்
உதிரத் தொடங்கி விட்டது அம்மா

எங்கே எனக்கு
வழுக்கை விழுந்து விடப் போகிறதோ
என்று அஞ்சுகிறேன்.

அம்மா,
நான் தமிழ்பேசி
மூன்றாண்டுகள் உருண்டோடிவிட்டன.

என்று முடிந்த அந்தக் கவிதை பார்வையாளர்கள் அனைவரையும் கவர்ந்து இழுத்தது. முடிவில் அவள் அளித்த பேட்டியில் சொன்னாள்:

நான் தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்தவள். ஆனால், பிறந்தது அமெரிக்காவில் எனது கலாச்சாரம், தொன்மை, பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு எண்ணற்ற கவிதைகளை எழுதியிருக்கிறேன். எனது தாய் மொழியை எப்படி இழந்தேன் என்ற அனுபவத்தைத்தான் வெள்ளை மாளிகையில் கவிதையாக மொழிபெயர்த்துக் கூறினேன். தாய்மொழியை மறந்துவிட்டு பிறமொழியை மாற்றாக ஏற்றுக் கொள்வது மிகுந்த வலி நிறைந்தது.

செல்வி மாயா ஈஸ்வரி என்ற அம்மாணவி சொன்ன உண்மை, உணர்வு பூர்வமானது.

இந்த உண்மையின் அடித்தளத்தில் நம் தாயகமும், இளைய தலைமுறையும் ஆழச் சிந்தித்துச் செயல்படத் தொடங்கினால், படிப்பாளிகளோடு நல்ல படைப்பாளிகளாகவும் மாணவச் செல்வங்கள் உருவாக முடியும்.

அதற்கான கூறுகளை இந்த மலரின் ஆக்கங்களில் காணலாம்.

அடுத்து வரும் பொன்விழா ஆண்டில் பல புதிய சாதனைகளைச் செய்து புதிய வரலாறு படைப்போம்.

அனைவருக்கும் அன்புநிறை வாழ்த்துக்கள்.



**முனைவர் ப. பூங்காவனம்**
முதல்வர்

# பொன்விழா ஆண்டில் அண்ணா கல்லூரி

புதுவை மாநிலத்தின் புகழ் பெற்ற கல்வி நிறுவனங்களுள் ஒன்றாக விளங்கும் காரைக்கால் அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி 1967 ஆம் ஆண்டு ஜுலை 14 ஆம் நாளில் மேதகு துணைநிலை ஆளுநர் S.L. சைலம் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

காரைக்கால் பகுதி மக்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தொடங்கப்பட்ட இந்தக் கல்லூரியில் ஆரம்பத்தில் புகுமுக (PUC) வகுப்பு மட்டுமே இருந்தது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைப்பைப் பெற்றது. (Affiliated to the University of madras) இந்தக் கல்லூரியில் அடுத்த ஆண்டே 1968 இல் B.A., பொருளியல் B.Sc., வேதியில் மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் தொடங்கப்பட்டன.

அதன் பின்னர், மேனாள் தமிழக முதல்வர் அறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பிறகு 1969 டிசம்பர் மாதத்தில் அதுவரை புதினக் கல்லூரி (Modern College) என்ற பெயரில் இயங்கி வந்த இக் கல்லூரி, பெயர் மாற்றம் செய்யப்பட்டு 'அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி' என்ற பெயரில் இயங்கத் தொடங்கியது.

1973 ஆம் ஆண்டு 3ஜுன் மாதத்தில் B.Sc., இயற்பியல் மற்றும் விலங்கியல் (B.Sc., PHYSICS & ZOOLOGY) ஆகிய பாடங்களும் தொடங்கப்பட்டன. 1998 ஆம் ஆண்டில் B.Sc., கணிப்பொறியியல் (B.Sc., COMPUTER SCIENCE) தொடங்கப்பட்டது. இவ்வாறு இளநிலையில் எட்டு பட்ட வகுப்புகளுடன் இயங்கி வரும் இந்தக் கல்லூரி, முதுகலைப் பட்ட வகுப்பு மையமாகவும் விளங்குகிறது. 1979 ஆம் ஆண்டு M. A., தமிழ்ப் பாடமும், 1981-82 இல் M. A., பொருளியல் பாடமும், 1985-86 இல் M. Com., பாடமும் தொடங்கப்பட்டன. தொடர்ந்து 1993-94 ஆண்டுகளில் Msw., MPA., சமுகப் பணி மற்றும் பொது நிர்வாகப் பாடமும் முதுகலைப் பட்ட வகுப்புகளும் தொடங்கப்பட்டன. இவ்வாறு ஐந்து முதுகலைப் பட்ட வகுப்புகளும் இந்தக் கல்லூரியில் இயங்கி வருகிறது.

1986-87 ஆம் ஆண்டு முதல் புதுவைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து (Affilated to the Pondicherry University) இயங்கி வரும் இக்கல்லூரி, முதன் முதலில் புதுவை மாநிலத்தில் தேசியத் தர மதீப்பீட்டுக்குச் சென்ற கல்லூரி என்ற பெருமையும் பெற்றுள்ளது. 2004 ஆம் ஆண்டில் தேசியத் தர மதிப்பீட்டுக்குழு C++ தகுதியை நம் கல்லூரிக்கு பெற்றுத் தந்தது.

அறிவியல் மாணவர்களுடைய சேர்க்கை குறைந்து வரும் சூழலில்,

இந்தக் கல்லூரி 2013 இல் மீண்டும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு **அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி** (Arignar Anna Govt. Arts & College ) என்று அழைக்கப் பெற்றது. தேசியத் தர மதிப்பீட்டுக் குழு மீண்டும் இந்தக் கல்லூரியை ஆய்வு செய்து 2015 செப்டம்பர் மாதத்தில் B Grade 2.24 தகுதியை 2.24 தகுதியைக் கொடுத்துள்ளது. 2015-16 ஆம் கல்வியாண்டில் இங்கு படித்த மாணவர்களுடைய எண்ணிக்கை 796 ஆகும். இவர்களில் 51% ஆண்கள், 49% பெண்கள் ஆவர். இந்தக் கல்லூரியில் பயிலும் மாணவர்களில் ஏறத்தாழ 60 MBC மற்றும் OBC பிரிவை சேர்ந்தவர்கள் 30% அட்டவணை இணத்தவர்கள் ஆவர்.

கல்விப் பணியில் 49 ஆண்டுகளைக் கடந்து இன்று 14.07.2016 பொன்விழா ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இந்தக் கல்லூரிக்குத் தேவைப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 70 ஆக உள்ளது. ஆனால் 47 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். மேலும் 2014 ஆம் ஆண்டில் முதல் உடற் கல்வித்துறை ஆசிரியர் பணியும் நிரப்பப்படாமல் உள்ளது. ஆகவே, கல்லூரிக்குத் தேவைப்படும் ஆசிரியர்கள் உடனடியாகப் பணியமர்த்தப்பட வேண்டிய நிலைமை உள்ளது.

அலுவலகப் பணியாளர்கள் 30 பேர் உள்ளனர். ஆனால், 2014 ஆம் ஆண்டு முதல் நூலகர் பணியும் நிரப்பப்படாமல் உள்ளது. இக் குறைகளை நீக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மேலும், இயற்கையான சூழலில் விளையாட்டு அரங்கம் அமைந்துள்ளது. இக் கல்லூரியில் உள் விளையாட்டு அரங்கம் தொடங்குவதற்கு GUC 70 இலட்சத்திற்கு மதிப்பிட்டது. ஆனால் GUC 60 இலட்சம் மட்டுமே நிதியுதவியாக வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள 10 இலட்சத்தை நமது புதுவை அரசு மனமுவந்து அளித்ததால் உள் விளையாட்டு அரங்கம் தொடங்குவதற்கு ஏற்பாடாகி உள்ளது.

அண்ணா கல்லூரியில் படித்த மாணவர்கள் அரசியல், அறிவியல், இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளிலும், சாதனைகளைப் படைத்து வருகின்றனர். தற்போது, புதுவை அரசின் உயர் கல்வித் துறை அமைச்சராக இந்தக் கல்லூரியின் முன்னாள் மாணவர் பொறுப்பேற்று இருப்பது அதற்குத் தக்க சான்றாகும்.




The Brainwave
Dr. P. POONGAVANAM, Principal



The Intellectuals

# ARIGNAR ANNA GOVERNMENT ARTS & SCIENCE COLLEGE

## KARAIKAL - 609 605

## 49th COLLEGE DAY - 2016

Our college is celebrating its 49th annual day. On this occasion, I have the special honour and privilege of presenting the annual report for the Academic Year 2015-16.

On 14th July 1967, this college was started with the name of Modern College by Shri. S.Silam, the then Lieutenant Governor of Puducherry. The main mission of the institution is to impart higher education to the rural, marginalized, socially and economically backward population of Karaikal District. In December 1969, the college was renamed Arignar Anna Govt Arts College. In 2013, the nomenclature was again changed as Arignar Anna Govt Arts and Science College with the intention to attract science students. This college is running 8 UG courses and 5 PG Courses. Apart from regular courses, the following three UGC sponsored Add on Certificate Courses 1) Mass Communication, 2.) Computer Hardware Maintenance 3) Disaster Management is also offered to enhance the employability of the students.

For the past 49 years, this college has been striving to fulfill its mission. This college was the first Govt College in the Union Territory accredited by NAAC. Recently, in the month of September 2015, we have got NAAC reaccreditation with B grade.

**ACADEMIC ACHIEVEMENTS:**

**DEPARTMENT OF TAMIL:**

The department has organized a seminar on Tholkappiam, the ancient work on Tamil Grammar. **Dr. Padmanaban,** has delivered a special lecture on Tholkappiam. Dr. Sahul Hammed has delivered a talk during the valedictory function of Tamil Literary Association.

**Dr. Krishnakumar,, HOD,** has presented two papers in national seminars and another two papers in international seminars. He has written a book on the life of Dr. Abdul Kalam. He has also received awards conferred by various agencies.

**Dr. S. Sethupathi.** Assistant professor, has attended the Refresher Course at Bharathiar University. He was nominated as chairperson in two international conferences. He has presented three papers in international conferences and six papers in national seminars. He was the coordinator for a two day workshop organized jointly

by Sahitya Academy and Auroville Society. He has also appeared in TV and Radio programmes. He has published nine books.

**Dr. R. Kurinji Vendan,** Assistant Professor has presented six papers in national seminars. In France, at Paris, he has delivered a special lecture on Indian Tamils in France and their contribution to Tamil Literature. He has presented a research paper in a conference at Zurich, Switzerland. He has also presented a paper in a conference in West Indies. In the best director division, two awards were given to him for his contribution to the short film in the International Film Festival at Jakartha, Indonesia.

**Dr. A. Raja Lakshmi,** Assistant professor, has published two books. She has also published an article in a journal and delivered a lecture at Madras University

**Dr. Vajravelu,** Assistant Professor has acted as a coordinator in a national seminar. He has presented three papers in national conferences. He has also published a book.

**Dr. Chandra,** Assistant Professor, has presented three papers in national conferences and she has also participated in Radio and TV programmes.

**Mr. Md. Asan Maricar,** Assistant Professor, has attended the Refresher Course at Bharathiar University. He has composed and released the song lyrics in cassette form.

**Mr. K. Kumar,** Assistant Professor, has presented a paper in a national seminar at Puducherry

**Mrs. Latha,** Assistant Professor has presented a research paper.

**Dr. V. Selva Perumal,** Assistant Professor, has attended 2 day programme on IQAC at Puducherry. He has also attended Faculty Development program on Life Skills from 24th August to Is Sept 2015 organised by ICT academy , Puducherry. He has presented five papers in international conferences and two^apers in national seminars.

**DEPARTMENT OF ENGLISH :**

The Department of English is conducting an UGC sponsored certificate course in Mass Communication.

**Dr. M. Palanisamy, HOD,** has delivered nine lecturers in national seminars at various places.

**Mrs. K. Meenatchi,** Assistant Professor, has attended two national seminars.

**DEPARTMENT OF ECONOMICS :**

**Mr. G. Balasubramanian,** Assistant Professor was awarded PhD in Economics by Bharathidasan University.

**Rajendran Mathamangalam,** Assistant Professor has presented three papers in national seminars. He was a resource person in three national seminars.

**DEPARTMENT OF COMMERCE :**

The department of Commerce has organized a one day workshop on Investors' protection Resource Person from SEBI spoke on the occasion.

**Mr. T. Devasenathipathy** was the coordinator for the workshop.

**Dr. S. Thanikachalam,** Associate Professor and Head, has delivered two special lectures. **Thiru. Thanikachalam, and Thiru. P. Sankaran,** Assistant Professor have received their PhD in Commerce.

**DEPARTMENT OF MATHEMATICS :**

**Dr. Muthu Ganapathy Subramanian,** Associate Professor and Head, has published a research article in a journal.

**Hrs. G. Soudjada,** Assistant Professor, has participated in a national conference. She has acted as a resource person in a state level seminar.

**DEPARTMENT OF PHYSICS :**

The department has inaugurated Physics Association. The inaugural address was given by Dr. Himapathy from Bharathiar College of Engineering and Technology, Karaikal.

**Dr. P. B. Nagabalasubramanian,** Assistant Professor, has published two research papers in international journals. He has presented a paper in an international conference. He is a member of a doctoral committee at AVC College, Mayiladuthurai.

**DEPARTMENT OF CHEMISTRY :**

Dr. N. Puviarasan, Scientist, Satellite Meteorology, New Delhi has inaugurated Chemistry Association. Er. P. Venkataramanan (Chemical) Energy consultant & External faculty, Petroleum conservation Research Association, Chennai has delivered the valedictory address.

**Dr. JR. Veeraraghavan,** Associate professor & Head was the coordinator for the national seminar conducted by Bharathidasan Govt College for women. He is a member of Board of studies in SCSVMV University, Kanchipuram. He is also an examiner for PhD and M. Phil viva voce Examinations.

**Dr. V. Arjunan,** Associate Professor, has published seven research papers during this academic year. He gave an invited talk at St. Peter's University, Chennai. He has also presented six papers in the international conferences. He is a member of PG Board of studies and this college nodal office for RUSA. During this academic year, he has produced one Ph D and two Ph D scholars are waiting for public viva voce. He is also an examiner for Ph D thesis from various Universities.

**Mrs. K. M. Tajan Meera Begam** was awarded Ph D in chemistry from Bharathidasan University, Thirichirapalli. She has also published a paper in an International journal.

## DEPARTMENT OF ZOOLOGY :

The department has conducted one day awareness programme on "Marine Biodiversity Resources and its Conservations". Coastal Cleaning programme was organized jointly with NETFISH of MPEDA and M.S. Swaminathan Research foundation. For the first time in the history of this college, the Dept. of Zoology has signed a Memorandum of Understanding with MSSR, poombugar for the short term certificate course cum training programme **on** value added sea food preparation to our students.

## DEPARTMENT OF COMPUTERSCIENCE :

The department is conducting the UGC sponsored certificate course in Computer Hardware Maintenance. The department is also looking after website designing and other computer related works pertaining to the college.

## DEPARTMENT OF SOCIAL WORK :

**Dr. Lakshmanapathy,** Assistant Professor, has acted as a resource person in a workshop. He is the NSS Programme officer of this College.

**Dr. Sivakumar,** Assistant Professor, is the coordinator for the Red Ribbon Club of the college. He is also looking after the Placement Cell.

An UGC minor research project is also undertaken by **Mr. Sundar Arumugam,** Assistant Professor.

## DEPARTMENT OF PUBLIC ADMINISTRATION :

**Dr. Md, Asaad Raza,** HOD, has published three research papers in the international journals. He has completed one UGC minor research project. He is a member of board of studies. He has also presented two research papers in national seminars and one in international seminar.

**Mr. V. Chandrasekaran,** Assistant Professor, has published one research paper in international journal. He has also presented a paper in a national seminar.

We are proud to record here that our college celebrated World's Women's Day on 8th March. Mrs. **V. Bhuvaneswari,** the secretary, VBEDS, delivered lecture on Women Empowerment.

**Dr. Sevarirajan,** Information to be brought

## NATIONAL SERVICE SCHEME :

Our NSS unit has taken up the following activities during this year.

1. Participated in the International Yoga programme, Organized a Helmet Awareness Rally, Organized a Dengue Awareness programme.
2. Organized a Free Dental Camp, Participated in the Digital Week Marathon.
3. Organized a cleaning programme in connection with Gandhi Jeyanthi on October 2nd 2015
4. Organized a campus cleaning programme in connection with NAAC visit for 3 days.
5. Participated in the Talk Show in connection with Election awareness at Polytechnic College.1.
6. 5 NSS volunteers participated in the employability skill training programme at Pondicherry University for 5 days.
7. 6 NSS volunteers Participated in 2 days training programme on Disaster Management at Karaikal Polytechnic College.
8. Organized a Human chain programmme in connection with election awareness to ensure 100% voting and vote not for sale.
9. Participated in the cultural awareness programme organized by Karaikal NSS cell and our volunteers performed dance.
10. Participated in the fishing harbor cleaning programme in association with fisheries department.
11. Our student, Pushparaj got State NSS Award.
12. Organized a special camp at Keelaparthikudi village for seven days from 27.01.2016 to 02.02.2016.
13. NSS volunteers went to Thanjavur for a visit.

**NCC - GIRLS WING :**

NCC Girls-Wing was established in our college in the year 2013. 27 students are enrolled and many of them participated in the regular activities. The NCC Cartaker, **Mrs. K. Meenatchi,** Assistant Professor of English has organished various NCC activities. NCC girl students have attended B & C certificate exaninations held at Karaikal and at Puducherry. They have also attended the following camps: CATC, Zonal NCC shooting, Trekking camp, RDC, NCC National Games, RDC-IGC.

Cadet R. Chitra was selected as the best player in Kabadi in NCC National Games held at Delhi.

Cadet D. Stella Berlins Rani of III Zoology was selected as the best cadet for the year

2014. She las received an amount of Rs.3500/- as prize award during March 2016.

**BEST NCC CADET (GIRLS WING):**

T. Dhivya of III B.Sc Zoology was selected as the best cadets for the year 2016. She has ittended almost all the training camps and she has participated in many cultural programmes . She was given the Rank Senior under Officer in the year 2016.

**RED RIBBON CLUB:**

Red Ribbon Club has organized awareness programme on HIV and AIDS for both boys and girls on 17th and 21st March 2016. Mrs. V. Bhuvaneswari, the secretary, VBEDS has delivered lectures on HIV.

**COACHING CLASSES:**

Most of our students have undergone schooling in Tamil medium. Realising the necessity of developing English communication skills, we have taken special initiative to start spoken English classes for UG and PG final year students. 100 students have attended classes regularly. Free Couching classes have been conducted for various competitive Examinations like Banking, RRB, TNPSC Group II, III, and IV. The students have also been trained not only for writing the competitive exams but also for facing interview for various jobs in the market.

**PLACEMENT CELL:**

The placement Cell of this college is promoting students' accessibility to campus interview opportunities. During this academic year, eight of our students are placed in companies such as ICT, Chennai, Road Map, and Inflore Technologies, Puducherry.

**DEPARTMENT OF PHYSICALEDUCATION**

**STUDENT ACHIEVEMENT AWARDS:**

❖ Selvan P. Daniel rock of II B.A. Economic, Selvan E. Mahaveeran of III B.A., Economics and Selvan V. Loganathan of I B.A., Economics represented Pondicherry University Tournament Organized by Algappa University, Karaikudu, Tamilnadu from 04.01.2016 to 08.01.2016.

❖ Selvan S. Punniamurthy, of II B.A Economic, Selvan S. Venkatesh of III B.Sc. Physics, Selvan J. Ravichandaran of II B.Com and /selvan G. Sandhana Prakasam of I M.Com Represented Pondicherry University Ball Badminton Team the all Indai Inter University Ball Badminton tournament organized by managalore University, Mangalore, Karnataka from 21-12-2015 to 25-12-2015.

❖ Selvan S. Manikandan of III B.A. Tamil and Selvan M. Vignesh of II B.Sc.Mathematics Represented Pondicherry University Hockey Team in the south zone Inter University Hockey tournament organized by Acharya Nagarjuna

University, Guntur, Andhra Pradesh From 30-11-2015 to 04-12-2016.

❖ Selvi R. Chitra of II B.Sc Mathematics Represented Pondicherry University Kabaddi Team in the South zone Inter University Kabaddi Tournment organized by Tamilnadu Physical Education and sports University, Chennai, Tamilnadu from 06-02-2016 to 09-02-2016.

❖ Selvi S. Thenmozhi of I M.S.W and Selvi J. Deepika of II B.A. Economics Represented Pondicherry University Ball Badminton Team in the all Indian Inter University Ball Badminton Tournament organized by SRM University, Chennai, Tamilnadu 23-01-2016.

❖ Selvan K. jegan of III B.Com Represented Pondicherry University Weight Lifting team the all India Inter University Weight lifting competition organized by Acharya Nagarjuna University, Guntur, Andhra Pradesh from 11.01.2016 to 14-01.2016.

❖ Selvan N. ManikandanPrabhu of II B.A. Economics Represented Pondicherry University best Physque team in all India University best Physique competition organized by Acharya Nagarjuna University, Guntur, Andhra Pradesh from 11-01-2016 to 14-01-2016.

Selven S. Kirubakaran of II B.A. Economics Represented Pondicherry University Kabaddi team in the South Zone Inter University Kabaddi Tournament organized by Kuvempu University, Shimoga from 15-10-2015 to 19-10-2015.

## ACHIEVEMENTS OF OUR STUDENTS IN THE INTER COLLEGIATE TOURNAMENTS ORGANIZED BY PONDICHERRY UNIVERSITY

❖ Our college ball badminton team got First Place in the inter college ball badminton tournment.

❖ Selvan K. Jegan of III B.Com bagged Gold Medal in the inter college weight lifting competition.

❖ Selvan N. Manikandan Prabhu of II B.A. Economics bagged Gold Medal in the inter collegiate 1500M competition.

❖ Selvan R. Vinth Raj of II B.Com bagged Gold Gold Medal in the inter collegiate best Physique competition.

❖ Selvan V. Raguvaran of I M.A. Economics bagged Silver Medal in the inter collegiate 1500M competition.

❖ Selvan B. Prabakaran of II B.Com bagged Bronze Medal in the inter collegiate 1500 M competition.

❖ Selvan S. Manikandan of III B.A. Tamil bagged Bronze medal in the inter collegiate 400 M competition.

**INTRAMURAL COMPETITION :**

The following sports and games were conducted successfully for Men and Women students.

**GAMES :**

1. Cricket ( Men )
2. Hand Ball ( Men )
3. Foot Ball ( Men )
4. Volley Ball ( Men & Women )
5. Ball Badminton ( Men )
6. Badminton ( Women )
7. Kabaddi ( Men & Women )
8. Throw Ball ( Women )

**ATHLETICS :**

1. 200 M ( Men & Women )
2. 400 M ( Men & Women )
3. 1500 (Men & Women )
4. Long Jump ( Men & Women )
5. High Jump ( Men & Women )
6. Shot Put ( Men & Women )

**FACULTY INFORMATION SHEET :**

**Name : Dr. R. Savarirajan,** B.Sc., Physics, MPES M.Phil., Ph.D.,

Attended training programmes for Physical Education Teachers and published four research papers in National and International Journals.

**RESEARCH PUBLICATIONS :**

